# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## முதலாம் தவணைப் பரீட்சை – 2024

| தரம் - 12(2025) | பொருளியல் | நேரம்: 3.00 மணித்தியாலங்கள் 10 நிமிடங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் .........................................................................................

**அறிவுறுத்தல்கள்:**
- 1 தொடக்கம் 20 வரையான பல்தேர்வு வினாக்கள் அனைத்திற்கும் மிகப் பொருத்தமான விடையினை தெரிவு செய்க.
- வினாப்பத்திரம் இரண்டில் பகுதி “அ” இலிருந்து இரண்டு வினாக்களையும், பகுதி “ஆ” இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களிற்கு விடையளிக்குக.

### பகுதி - I

01. பின்வரும் கூற்றுக்களில் பேரினப் பொருளாதார நேர் கூற்று எது?
   (1) பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளவீதம் வாழ்க்கைச் செலவை கருத்தில் கொண்டு அதிகரிக்கப்பட வேண்டும்.
   (2) பால் மாவின் விலை தொடர்ச்சியாக அதிகரிப்பதனால் குழந்தைகளின் போசாக்கு பாதிக்கப்படுகின்றது.
   (3) பொது விலைமட்டத்தில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான அதிகரிப்பு பணவீக்கம் ஆகும்.
   (4) பொருளொன்றின் நிரம்பல் தொகையானது அதன் விலை மாற்றத்துடன் நேர்க்கணியத் தொடர்பினை கொண்டுள்ளது.
   (5) கடந்த ஆண்டு தேயிலையின் விலையின் விலை வீழ்ச்சி அடைந்ததனால் தேயிலை மீதான வருவாய் குறைவடைந்தது.

02. பொருளாதாரம் ஒன்றில் அமைச்செலவு தோற்றம் பெறக்காரணம்
   (1) வளங்களின் அருமையும் வரையறுக்கப்பட்ட விருப்பங்களும்
   (2) வளங்களின் மாற்றுப் பயன்பாடும் வரையறுக்கப்படாத விருப்பங்களும்
   (3) வரையறுக்கப்படாத மனித விருப்பங்களும் தெரிவும்
   (4) வளங்களின் அருமையும் மாற்றுப்பயன்பாடும் தெரிவும்
   (5) வரையறுக்கப்பட்ட தேவைகளும் வரையறுக்கப்ட்ட விருப்பங்களும்

03. பின்வருவனவற்றுள் எதனை பொருளாதாரப் பண்டத்தின் மிகப் பிரதானமான பண்பாக கொள்வர்.
   (1) விலைப்பெறுமதி, எல்லைச்செலவு
   (2) உற்பத்திச் செலவு, அமையச்செலவு
   (3) வரையறையற்ற நிரம்பல், அமையச்செலவு
   (4) மாற்றுப்பயன்பாடு, அமையச்செலவு
   (5) நுகர்வுச் செலவு, விலைப்பெறுமதி

04. பின்வருவனவற்றுள் பொருளியலில் நிலமாக கருதப்படுவது
   (1) கொழும்பு துறைமுக நகரம்
   (2) இரணைமடுக் குளம்
   (3) இரத்தினபுரி இரத்தினக்கல் நிலப்படிமங்கள்
   (4) தாமரைக் கோபுரம்
   (5) லக்சபானா நீர் மின் நிலையம்



kalvi.lk

05. இயற்கை வளம் ஒன்று கொண்டிருக்கும் பண்பு
(1) விலைப்பெறுமதி காணப்படும்.
(2) நிரம்பலில் வரையறுக்கப்பட்ட தன்மை காணப்படும்.
(3) வளச் செலவினை கொண்டிராத இயற்கையின் கொடை
(4) மனித முயற்சி காணப்படும்.
(5) மேலதிக நுகர்விற்கான எல்லைச்செலவு காணப்படும்.

06. சமூக சந்தைப் பொருளாதாரத்தின் பண்பாக அமைவது
1) வளங்கள் அனைத்தும் பொதுமக்கள் சார்பில் அரசுடமை
(2) அடிப்படைப் பெருளாதார பிரச்சினைக்கான தீர்வு மத்திய திட்டமிடல் மூலம் மேற்கொள்ளப்படல்
(3) உற்பத்தி மற்றம் நுகர்வு அரசினால் ஒழுங்குபடுத்தபடல்
(4) சமூக நலச்சேவையில் அரசாங்கம் தீவிரமாக செயற்படல்
(5) விலைகள் மற்றும் கூலிகள் மத்திய திட்டமிடலாளர்களால் தீர்மானிக்கப்படல்.

07. அடிப்படையில் சந்தைப் பொருளாதாரமாக கருதப்படக் காரணமாக இருப்பது எது?
(1) பொருளாதாரத்தின் வளங்கள் அனைத்தும் தனியாருக்கு உரிமையாக காணப்படல்
(2) பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகள் விலைப் பொறிமுறை மூலம் தீர்வு காணப்படல்.
(3) பொருளாதாரத்தின் வளங்கள் யாவும் பொதுவுடமையாக காணப்படல்
(4) பொருளாதாரத்தில் தீவிரமாக அரச தலையீடுகள் காணப்படல்
(5) பொருளாதாரத்தை வினைத்திறனாக்கும் பொருட்டு தனியார் துறை அதிகளவில் அனுமதிக்கபடல்.

08. எதை உற்பத்தி செய்தல் எனும் அடிப்படைப் பொருளாதார பிரச்சினை குறித்து நிற்பது எதனை?
(1) அருமையான வளங்களைப் பயன்படுத்துதல் தொடர்பான தொழில்நுட்ப பிரச்சினையாகும்.
(2) பொருளாதாரத்தில் இடம்பெற்ற உற்பத்திகளை தனிநபர்களிடையே எவ்வாறு பங்கீடு செய்தல் என்பது பற்றிய பிரச்சினையாகும்.
(3) அருமையான வளங்களை தெரிவு செய்யப்பட எவ் உற்பத்திகளின் உற்பத்திகளுக்கு பங்கீடு செய்தல் என்பது பற்றிய பிரச்சினையாகும்.
(4) விலைப் பொறிமுறை மூலம் வளங்களை பொருத்தமான பண்ட உற்பத்திகளுக்கு பங்கீடு செய்தல் என்பது பற்றிய பிரச்சினையாகும்.
(5) மத்திய திட்டமிடல் குழு மூலம் வளங்களை சமூக நலனை மேம்படுத்தும் வகையில் பங்கீடு செய்தல் பற்றிய பிரச்சினையாகும்.

09. பொருளாதார முறைமைகள் பல்வேறு வகையில் வேறுபடுத்தி நோக்கப்படக் காரணமாக அமைவது
(1) பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகள்
(2) அரசாங்கத்தின் தலையீடுகள்
(3) தனியார் துறையின் தலையீடுகள்
(4) பொருளாதாரத்தின் வளங்களின் உரிமையும், பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகளுக்குமான தீர்வு முறைகளும் வேறுபடல்
(5) தனிநபர் விருப்பங்கள் வேறுபடல்

10. பொருளாதாரம் ஒன்றின் உற்பத்தி சாத்திய வளையியின் மீது பொருளாதாரம் தனது உற்பத்திப் புள்ளியைக் கொண்டிருப்பின் உறுதியாக கூறக் கூடிய கருத்து யாது?
(1) பொருளாதார வினைத்திறன் நிலவுகின்றது.
(2) வளப் பங்கீட்டில் வினைத்திறன் நிலவுகின்றது.
(3) சமூகத்தின் விருப்பங்கள் உச்சளவில் பூர்த்தி செய்யப்படுகின்றது.
(4) அரசாங்கம் வினைத்திறனாக செயற்படுகின்றது.
(5) பொருளாதாரத்தின் உற்பத்தி வினைத்திறனாக இடம்பெறுகின்றது.

11. நிகழ்காலத்தில் பொருளாதாரம் தனது வளங்களை அதிகளவில் நுகர்வுப் பண்ட உற்பத்திக்கு பங்கீடு செய்யும் எனின் எதிர்வு கூறக்கூடிய முடிவு
(1) இன்றைய மக்கள் தமது வாழ்க்கைத் தரத்தை தியாகம் செய்ய நேரிடும்.




kalvi.lk

(2) எதிர்கால மக்களுக்கு நுகர்வு வாய்ப்பு குறைவடையும்
(3) மூலதன முதலீட்டிற்கான வாய்ப்பு விட்டுக் கொடுக்கப்படும்.
(4) எதிர் காலத்தில் பாரியளவிலான பொருளாதார வளர்ச்சி ஏற்படும்
(5) நிகழ்கால உற்பத்திக்கு மூலதன வளங்கள் கிடைக்கப் பெறும்

12. வெளிநாட்டு முதலீடுகளின் உட்பாய்ச்சல் உற்பத்தி சாத்திய வளையி தொடர்பில் ஏற்படுத்தும் தாக்கம் யாது?
(1) வளையி மீதான உற்பத்திப் புள்ளி வலப்புறம் நோக்கி நகரும்.
(2) நிகழ்கால உற்பத்தி மட்டம் அதிகரிக்கும்.
(3) வளையியின் உட்புறமான புள்ளி மேல் நோக்கி நகரும்.
(4) பொருளாதாரதத்தின் மெய் உற்பத்தி இயலளவு அதிகரிக்கும்.
(5) வளப் பங்கீட்டில் மாற்றம் ஏற்படுவதனால் வளையி நகர்வடையும்.


13. குறிப்பிட்டதொரு பண்டம் தொடர்பான கேள்வி வளையி பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




வரைபில் புள்ளி B யிலிருந்து A வரையான நகர்வுக்கு காரணமாக அமையக் கூடியது
(1) நுகர்வோரது பண வருமானத்தில் ஏற்படுகின்ற ஓர் அதிகரிப்பு
(2) நுகர்வோரது பண வருமானத்தில் ஏற்படுகின்ற ஓர் குறைவு
(3) சார்பு விலைகளில் ஏற்படுகின்ற ஓர் குறைவு
(4) நுகர்வோரது மெய்வருமானத்தில் ஏற்படும் ஓர் வீழ்ச்சி
(5) நுகர்வோரது சுவையில் ஏற்படுகின்றதோர் வீழ்ச்சி

14. கிபன் பண்டம் தொடர்பாக விலைக்கும் கேள்வித் தொகைக்கும் இடையே நேரான தொடர்பு நிலவக் கராணமானது?
(1) கிபன் பண்டங்கள் ஓர் இழிவுப் பண்ட வகையைச் சார்ந்திருப்பதனால்
(2) விலை மாற்றத்தின் பதிலீட்டு விளைவு எதிர்க்கணியமாக அமைவதனால்
(3) விலை மாற்றதின் பதிலீட்டு விளைவு நேர்க்கணியமாக அமைவதனால்
(4) விலை மாற்றத்தின் வருமான விளைவு நேர்க்கணியமாக அமைவதனால்
(5) விலை மாற்றத்தின் வருமான விளைவு எதிர்க்கணியமாக அமைவதனால்

15. பண்டம் ஒன்று தொடர்பான கேள்வி வளையி தரப்பட்டுள்ளது.




குறிப்பிட்ட கேள்வி வளையிற்கு பொருத்தமான கேள்விச் சார்பு?
(1) Qd = 600 - 20p
(2) Qs = 120 - 4p
(3) Qs = 180 - 4p
(4) Qs = 150 - 5p
(5) Qs = 60 - 2p



kalvi.lk

16. X பணத்திற்கான விலை ரூபா 50 இலிருந்து ரூபா 60 ஆக அதிகரித்த போது அதன் விற்பனை வருவாய் ரூபா 15000 இலிருந்து ரூபா 18000 ஆக அதிகரித்தது எனின் குறிப்பிட்ட பண்ட ஓர்
(1) பூரண விலை கேள்வி நெகிழ்வுள்ளது.
(2) பூரண விலை கேள்வி நெகழ்வற்றது.
(3) விலை கேள்வி நெகிழ்வுள்ளது.
(4) அலகு கேள்வி நெகிழ்வள்ளது.
(5) விலை கேள்வி நெகிழ்வற்றது.

17. பண்டம் ஒன்று தொடர்பான நிலைமைகளை அட்டவணை குறித்து நிற்கின்றது.

| **பண்டத்தின் விலை** | **நுகர்வோரது வருமானம்** | **பண்டத்தின் கேள்வித் தொகை** |
|---|---|---|
| 100 | 40000 | 500 |
| 100 | 50000 | 400 |

குறித்த பண்டத்திற்கான வருமானக் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம்?
(1) -0.8
(2) 0.8
(3) - 1.25
(4) 1.25
(5) - 1.0

18. பின்வருவனவற்றுள் எதன் மூலம் இரு பொருட்கள் ஒன்றுக்கொன்று பதிலீடானவை என்பது எடுத்துக்காட்டப்படும்
(1) நேர்க்கணிய வருமானக் கேள்வி நெகிழ்ச்சி
(2) பூச்சியத்தை விடக்குறைவான குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி
(3) ஒன்றுக்கு குறைவான விலைக் கேள்வி நெகிழ்ச்சி
(4) நேர்க்கணிய குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி
(5) விலை அச்சிற்கு சமாந்தரமான கேள்வி வளையி

Education கல்வி අධ්‍යාපන

19. நிரம்பல் விதியினை ஏற்றுச் செயற்படுகின்ற நிரம்பல் கோட்டின் அமைவு புலப்படுத்துவது?
(1) வளையி சரிவு அதிகரித்துச் செல்வதனையாகும்.
(2) குறுங்கால எல்லை உற்பத்திகள் வீழ்ச்சியடைவதனையாகும்.
(3) உற்பத்தியில் எல்லைச் செலவுகள் வீழ்ச்சியடைவதனையாகும்.
(4) நிறுவனங்களின் இலாப அளவு மாற்றமின்றி காணப்படுவதனையாகும்.
(5) நுகர்வின் போதான எல்லைப் பயன்கள் வீழ்ச்சியடைவதனையாகும்.

20. நிரம்பல் கோடென்றின் வலது புற நகர்விற்கு ஏதுவான சந்தர்ப்பமாக அமைவது?
(1) கருதப்படும் பண்டத்தின் விலை அதிகரிப்பு
(2) கருதப்படும் பண்டத்தின் விலை வீழ்ச்சி
(3) தொடர்புடைய பண்டத்தின் விலை அதிகரிப்பு
(4) தொடர்புடைய பண்டத்தின் விலை வீழ்ச்சி
(5) உள்ளீடுகளின் விலை அதிகரிப்பு

(1x20= 20 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II
## "அ"

➢ **இப்பிரிவில் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்ய வேண்டும்.**

01. (i) அருமை என்ற எண்ணக்கருவினை விளக்கி அமையச்செலவு தோன்றுவதற்கு அருமை எவ்வாறு அடிப்படைக் காரணியாகின்றது என்பதனை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
(ii) பொருளாதார வளங்களை வரைவிலக்கணப்படுத்தி அதனை வகைப்படுத்திக் காட்டுக. (04 புள்ளிகள்)
(iii) பொருளாதார பண்டத்தையும் இலவசப்பண்டத்தையும் வேறுபடுத்திக் காட்டக்கூடிய 2 பிரதான பண்புகளை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
(iv) முயற்சியாண்மையின் 4 பிரதான தொழிற்பாடுகளும் எவை? (04 புள்ளிகள்)
(v) பின்வருவன எத்தகைய மூலதன வகையாகும் என குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
1. தொழிற்சாலை இயந்திரங்களும் பொறிகளும்
2. புகையிரதப் பாதைகள்
3. சத்திர சிகிச்சை நிலையங்கள்
4. தொழிற்சாலையில் முடிவுறா நிலையில் இருக்கும் பொருள் இருப்புக்கள்

02. (I) கட்டளைப் பொருளாதாரம் ஒன்றின் விசேடமான பண்புகள் எவை? (04 புள்ளிகள்)
(ii) சந்தைக் பொருளாதாரமொன்றின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்ப்பதற்குப் பயன்படும் தீர்வுப் பொறிமுறை யாது?
அதன் தொழிற்பாடுகள் யாவை? (04 புள்ளிகள்)
(iii) பொருளாதாரங்களின் வளங்களின் உரிமை என்ற அடிப்படையில் எழுந்த பொருளாதார முறைமைகளின் வகைப்படுத்தல் யாவை? (04 புள்ளிகள்)
(iv) பொதுவாக கட்டளைப் பொருளாதாரங்கள் வினைத்திறனாக செயற்பட முடியாது போவதற்கான காரணங்களை கூறுக? (04 புள்ளிகள்)
(v) சமவுடமைச் சந்தைப் பொருளாதாரங்கள் உருவாகியமைக்கு காரணங்களாக எவற்றை கூறுவீர்? (04 புள்ளிகள்)

03. (I) மூலப்புள்ளிக்கு குழிவான உற்பத்தி சாத்திய வளையி பொருளாதாரத்தின் வளங்கள், சந்தரப்பச் செலவு என்பன பற்றி குறிப்பாக உணர்த்துவது யாது? (04 புள்ளிகள்)
(ii) பொருளாதாரத்தின் வள இருப்பில் ஏற்படும் அதிகரிப்பு உற்பத்தி சாத்திய வளையியை எவ்வாறு மாற்றமடையச் செய்கின்றது என்பதனை வரைபடத்தைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)
(iii) பொருளாதாரத்தின் உற்பத்தி வினைத்திறன் என்பதனை உற்பத்தி சாத்திய வளையியைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)
(iv) பின்வருவனவற்றை உற்பத்தி சாத்திய வளையியில் வெளிப்படுத்துக.
அ. பொருளாதாரத்தில் அதிகமானோர் தொழிலை தேடுபவர்களாக காணப்படுதல்.
ஆ. அரசாங்கத்தின் விவசாய உற்பத்தி முறைகளை நவீன மயப்படுத்தல் திட்டங்கள்
இ. பொருளாதாரத்தின் கல்வியறிவு மட்டம் மேம்பாடடைதல்
ஈ. பொருளாதாரத்தில் தொழிலாளர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடல் (08 புள்ளிகள்)

## பகுதி II "ஆ"

➢ **இப்பிரிவில் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்ய வேண்டும்.**

04. (i) சாதாரண பொருளின் சந்தைக் கேள்வி அதிகரிப்பில் செல்வாக்கினைச் செலுத்தும் காரணிகள் எவை? (04 புள்ளிகள்)
(ii) சாதாரண பொருள், இழிவுப் பொருள், கிஃன் பொருள் என்பவற்றை வேறுபடுத்துக? (03 புள்ளிகள்)
(iii) கேள்வி விதி என்றால் என்ன? சாதாரண பண்டம் ஒன்று தொடர்பாக கேள்வி விதி தொழிற்பட வருமான விளைவு எவ்வாறு துணைபுரிகின்றது. (05 புள்ளிகள்)
(iv) இழிவுப் பண்டமொன்றின் விலைக்கும் கேள்வித் தொகைக்கும் இடையே எதிரான தொடர்பு நிலவுவது ஏன்? (04 புள்ளிகள்)



kalvi.lk

(v) குறித்ததொரு பண்டம் தொடர்பான கேள்வி அட்டவணை வருமாறு

| விலை | கேள்வித் தொகை |
|---|---|
| 20 | 90 |
| 40 | 30 |

A= நேரான கேள்வி கோட்டினை வரைக.
B= கேள்விக் கோட்டின் சார்பினை தருக.
C= ஆகக் கூடுதலான கேள்வி அளவு யாது? (04 புள்ளிகள்)

05. (i) பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்படுகின்றன.

- X பண்டத்தின் விலை 10% ஆல் அதிகரித்த போது Z பண்டத்தின் கேள்வி 15% ஆல் அதிகரித்தது.
- நுகர்வோர் வருமானம் 10% ஆல் அதிகரித்த போது X பண்டத்தின் கேள்வி 4% ஆல் அதிகரித்தது.
- X பண்டத்தின் விலை 10% ஆல் அதிகரித்த போது X பண்டத்தின் கேள்வி தொகை 5% ஆல் குறைவடைந்தது.

பின்வருவனவற்றை கணிப்பிடுக.
1. X பண்டத்தின் விலைக் கேள்வி நெகிழ்ச்சி?
2. X - Z பண்டங்களுக்கிடையிலான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி?
3. X பண்டத்தின் வருமானக் கேள்வி நெகிழ்ச்சி?
4. X - Z பண்டங்கள் பதிலீடுகள் ஆகுமா? (08 புள்ளிகள்)

(ii) பண்டமொன்றின் விலை 10/= ரூபாவிலிருந்து 20/= ரூபாவாக உயர்வடையும் போது அதன் கேள்வித் தொகை 4000 அலகிலிருந்து 2000 அலகாக குறைவடைந்தது எனின் குறித்த பண்டம் அலகு நெகிழ்ச்சியுடையது என முடிவெடுப்பீரா? விளக்குக? (04 புள்ளிகள்)

(iii) பின்வரும் சந்தர்ப்பங்களில் விற்பனையாளர் விற்பனை செய்யும் பண்டங்களின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியின் இயல்புகள் யாவை?
1. விலையை உயர்த்திய போதும் விற்பனை வருமானம் வீழ்ச்சி
2. விலையை குறைத்த போது விற்பனை வருமானம் நிலையானதாக காணப்பட்டமை
(04 புள்ளிகள்)

(iv) விலைக்கேள்வி நெகிழ்ச்சியின் உபயோகங்கள் யாவை? (04 புள்ளிகள்)

06. (i) பண்டம் ஒன்று தொடர்பாக நிரம்பல் விதி தொழிற்படுவதற்கு இலாப அதிகரிப்பு துணைபுரியும் விதத்தினை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) பண்டம் ஒன்று தொடர்பான நிரம்பல் வளையியானது நேர்க்கணிய சாய்வினையுடையதாக இருப்பதற்கு எல்லைச் செலவுகள் அதிகரிப்பது ஓர் காரணமாகும். எல்லைச் செலவுகள் அதிகரிப்பது ஓர் காரணமாகும். எல்லைச் செலவு அதிகரிப்பதில் துணை புரியும் காரணிகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) நிரம்பல் தொகை, நிரம்பல் இரண்டையும் வரைபடத்தின் துணையுடன் வேறுபடுத்தும்? (06 புள்ளிகள்)

(iv) பண்டமொன்று நிரம்பலைத் தீர்மானிக்கும் தொடர்புடைய பண்டங்கள் என்றால் என்ன? தொடர்புடைய பண்டங்களின் விலைமாற்றமானது குறிப்பிட்ட பண்டத்தின் நிரம்பலில் எத்தகைய செல்வாக்கினைச் செலுத்தும் (06 புள்ளிகள்)



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page